LAW & SOCIETY TRUST
නීතිය හා සමාජ භාරය
சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை

# புதிய சட்டங்கள் மற்றும் நிர்வாக முடிவுகளின் புதுப்பிப்பு ஜனவரி 2026

5th February 2026

LAW TRACKER

•

# புதிய சட்டங்கள் மற்றும் நிறைவேற்றுத் தீர்மானங்கள் இற்றைப்படுத்தல் - சனவரி 2026[1]

5 பெப்ரவரி 2026

## பொருளடக்கம்


**I. சான்றளிக்கப்பட்ட சட்டங்கள் ........ 3**

1. 2026 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு (திருத்தச்) சட்டம் ........ 3

**II. பாராளுமன்றத்தில் உள்ள சட்டமூலங்கள் ........ 4**

1. கொள்கல நிலையத் தொழிற்படுத்துநர்களுக்கு உரிமமளித்தல் சட்டமூலம் ........ 4

2. வாடகை (நீக்கல்) சட்டமூலம் ........ 4

4. இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம் ........ 5

5. பாராளுமன்ற ஓய்வூதியம் (நீக்குதல்) சட்டமூலம் ........ 5

6. யூஎன்வீ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் ........ 5

**III. தெரிவு செய்யப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்கள் ........ 7**

விவசாயம், கால்நடைகள், காணி மற்றும் நீர்ப்பாசனம் ........ 7

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி ........ 7

சுகாதாரம் ........ 9

போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் நகர அபிவிருத்தி ........ 9

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி ........ 11

பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்கள் ........ 11

சுற்றாடல் ........ 12

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து ........ 12

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் ........ 12

டிஜிட்டல் பொருளாதாரம் ........ 13


---

*[1] பொறுப்புத்துறப்பு -இலங்கையின் அண்மைய சட்டவாக்க மற்றும் நிறைவேற்றுத்துறை முன்னேற்றங்களை அறிந்து கொள்ள விரும்புவோருக்கு உதவுவதற்காக சட்டம் மற்றும் சமூக நம்பிக்கையினால் வேண்டப்பட்டவாறாக Chambers of Ermiza Tegal இனால் சுருக்கமான அறிக்கையொன்றாக இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தில் எவ்விதமான பகுப்பாய்வும் காணப்படவில்லை என்பதுடன் வழங்கப்பட்ட ஏதேனும் விளக்கம், ஆவணத்தின் அல்லது தீர்மானத்தின் சுருக்கமேயாகும். இது முழுமையானதல்ல என்பதுடன் சட்ட ஆலோசனையாக இதன் மீது தங்கியிருத்தலுமாகாது. குறிப்பிட்ட சட்டரீதியான அக்கறைகளுக்காகத் தயவுசெய்து தகுந்த சட்ட ஆலோசனையை நாடவும். ஏதேனும் கேள்விகள், தெளிவுபடுத்தல்கள் தேவைப்படின், அல்லது பின்னூட்டத்தை வழங்குவதற்கு tegal.lawchambers@gmail.com இனைத் தொடர்பு கொள்ளவும்.*

கைத்தொழில்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி ....... 13
மீன்பிடி, நீரியல்வள மற்றும் சமுத்திர வளங்கள் ....... 13
பெருந்தோட்டங்கள் மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு ....... 13
வலுசக்தி ....... 14
வீடமைப்பு, நிர்மாணம், மற்றும் நீர் வழங்கல் ....... 14
பொது நிர்வாகம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சிகள் ....... 14
சனாதிபதி செயலகம் ....... 15
பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்து ....... 15
பொலிஸ், ஆயதந்தாங்கிய படைகளுக்கான பெறுகை மற்றும் வசதிகள் ....... 15
இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு ....... 16
**IV. அதிவிசேட வர்த்தமானிகள் தெரிவு செய்யப்பட்டவை) ....... 17**
தேசியப் பாதுகாப்பு மற்றும் பொது ஒழுங்கு ....... 17
பதிவு மற்றும் அடையாளம் ....... 17
தேர்தல்கள் ....... 17
தொழில் மற்றும் தொழில்வாய்ப்பு ....... 18
போக்குவரத்து மற்றும் மோட்டார் போக்குவரத்து ....... 18
விலங்கு சுகாதாரம் ....... 18
விளையாட்டு மற்றும் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கான எதிர்ப்பு ....... 18
மத அனுஷ்டானங்கள் ....... 19
நியமனங்கள் ....... 19
சர்வதேச ஒத்துழைப்பு ....... 19
பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் தடைகள் ....... 19
ஊழல் எதிர்ப்பு ....... 19
சங்கங்களின் பதிவு ....... 20

•

## I. சான்றளிக்கப்பட்ட சட்டங்கள்

### 1. 2026 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு (திருத்தச்) சட்டம்

சட்ட இல.: 2026 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம்
சான்றளிக்கப்பட்ட திகதி: 2026 சனவரி 20
முதன்மைச் சட்டம்: 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு (திருத்தச்) சட்டம்
பிரதான திருத்தங்கள்:

- உரிமமொன்றும் பதிவுச் சான்றிதழும் வழங்கப்பட்டிருந்தாலேயொழிய (மீளச் செலுத்தப்பட முடியாத செயன்முறைக் கட்டணங்கள் தவிர்ந்த) கட்டணங்கள் அறவிடப்படுவதைத் தடை செய்கின்றது.
- ஆரம்பத்திற்கு முன்னர் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களின் தொழிலாளர்களுக்கு மாத்திரம் மூன்று வருடகால நிலைமாறுகால தொழில் வருமான வரியிலிருந்து விலக்களிப்பு வழங்குவதற்காக 35 ஆம் பிரிவை நீக்குதல்; ஆரம்பத்திற்குப் பின்னர் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களின் தொழிலாளர்கள் வரி விதிக்கப்படக்கூடியோராவர்.
- துறைமுக நகரத்தினுள் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுச் செலாவணி மாற்றல்கள், 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்துடன் இணங்கியொழுக வேண்டும் எனத் தேவைப்படுத்துகின்றது.
- துறைமுக நகரத்தினுள் மேற்கொள்ளப்படும் கரைகடந்த வங்கித் தொழிற்பாடுகளின் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை என்பவற்றை இலங்கை மத்திய வங்கிக்கு மாற்றுகின்றது.
- செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரம் ஒன்றாகப் பெயர் குறிக்கப்படுவதற்கும் தொடர்வதற்கும் விதித்துரைக்கப்படும் அளவுகோல்கள் மற்றும் பருவகால செயலாற்றுகை மதிப்பீடு என்பவற்றை அறிமுகம் செய்வதுடன் விளைவாந்தன்மையான திருத்தங்களையும் ஆக்குகின்றது
.

## II. பாராளுமன்றத்தில் உள்ள சட்டமூலங்கள்

### 1. கொள்கல நிலையத் தொழிற்படுத்துநர்களுக்கு உரிமமளித்தல் சட்டமூலம்

இல.: 2026 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கம்

அந்தஸ்து: அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது (முதலாம் மதிப்பீடு) – 2026 சனவரி 20

நோக்கம்: கொள்கல நிலையத் தொழிற்படுத்துநர்களின் உரிமமளித்தல், ஒழுங்குபடுத்தல் மற்றும் கட்டுப்பாடு என்பவற்றிற்கு ஏற்பாடு செய்தல்

பிரதான ஏற்பாடுகள்:

- கொள்கல நிலையத் தொழிற்படுத்துநர் உரிமங்களை வழங்குதல், புதுப்பித்தல், இடைநிறுத்தல், மற்றும் இரத்துச் செய்தல் என்பவற்றிற்காக சட்டச் சட்டத்தைத் தாபித்தல்.
- கொள்கல நிலையத் தொழிற்பாடுகளுக்காகத் தேவைப்படுத்தப்படும் ஆகக்குறைந்த தொழிற்பாட்டு, பாதுகாப்பு, மற்றும் தொழில்நுட்பத் தராதரங்களை அமைத்தல்.
- அறிக்கையிடல், இணக்கம், மற்றும் பதிவுகளைப் பேணுவதற்கான தேவைப்பாடுகள் உள்ளடங்கலாக, உரிமங்களைக் கொண்டுள்ளோரின் கடப்பாடுகளை வரையறுக்கின்றது.
- உரிமமின்றித் தொழிற்படல், நிலைமைகளை மீறுதல், அல்லது ஒழுங்குபடுத்தல் மேற்பார்வையைத் தடுத்தல் என்பவற்றிற்கான தண்டங்களைத் நிர்ணயிக்கின்றது.
- தொழிற்படுத்துநர்களுக்கான பரிசோதனைத் தத்துவங்கள், அதிகார அமுலாக்கம், மற்றும் நிலைமாறுகால ஏற்பாடுகள் உள்ளடங்கலான துணை ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

### 2. வாடகை (நீக்கல்) சட்டமூலம்

இல.: 2026 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கம்

அந்தஸ்து: அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது (முதலாம் மதிப்பீடு) – 20 சனவரி 2026

நோக்கம்: 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வாடகைச் சட்டத்தை நீக்குதல்

பிரதான ஏற்பாடுகள்:

- நியதிச்சட்ட வாடகைக் கட்டுப்பாடு மற்றும் தொடர்புடைய ஏற்பாடுகளை நீக்கி, 1972 ஆம் ஆண்டின் வாடகைச் சட்டத்தை நீக்குகின்றது.
- நிலக்கிழார் - குடியிருப்பாளர் உறவுகளை நிர்வகிப்பதற்காக குடியிருப்பு மற்றும் வாடகை தொடர்பான விடயங்களை இற்றைப்படுத்தப்பட்ட நியதிச்சட்டங்கள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கு இடமாற்றுகின்றது.
- நீக்கத்தின் பின்னர் தற்போதுள்ள குடியிருப்பு உடன்படிக்கைகள் மற்றும் பிணக்குகள் என்பவை எவ்வாறு கையாளப்படும் எனத் தெளிவுபடுத்துகின்றது.
- பழைய சட்டத்தின் கீழ் “அதிகாரமளிக்கப்பட்ட வாடகை” மற்றும் வாடகையை நிர்ணயிக்கும் பொறிமுறைகளுக்கான குறிப்பீடுகளை அகற்றுகின்றது
- தற்போதுள்ள குடியிருப்பு ஒப்பந்தங்கள் மற்றும் சட்ட நடவடிக்கைமுறைகளின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதற்காக நிலைமாறுகால ஏற்பாடுகளை வழங்குகின்றது.

### 3. கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கு அனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தப்படாப் பொதுக் காவுநர்க்கு மற்றும் கொள்கலம் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்த) சட்டமூலம்

இல.: 2026 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கம்

அந்தஸ்து: அறிமுகம் செய்யப்பட்டுள்ளது (முதலாம் மதிப்பீடு) – 20 சனவரி 2026

நோக்கம்: 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்திற்கான திருத்தம்

பிரதான ஏற்பாடுகள்:

- முதன்மைச் சட்டத்தின் நோக்கெல்லையிலிருந்து கொள்கலம் செயற்படுத்துநர்களை நீக்குகின்றது

- 
- கொள்கலம் செயற்படுத்துநர்களின் நீக்கத்தைப் பிரதிபலிப்பதற்காக விரிவுப் பெயரையும் வரைவிலக்கணங்களையும் திருத்துகின்றது.
- புதிய கொள்கல நிலையத் தொழிற்படுத்துநர் ஆளுகையின் கீழ் அவை நடத்தப்படுவதை அனுமதித்து, தற்போதுள்ள உரிமங்கள் மற்றும் விண்ணப்பங்களின் செல்லுபடியாகுந்தன்மையைப் பேணுகின்றது.
- திருத்தம் செய்யப்பட்ட நோக்கெல்லையுடன் சட்டத்தை நேரொத்ததாக ஆக்குவதற்காக, கொள்கலம் செயற்படுத்துநர்களைக் குறிப்பீடு செய்யும் பிரிவுகளுக்கு விளைவாந்தன்மையான திருத்தங்களை மேற்கொள்கின்றது.
- கப்பற்றொழில் முகவர்கள், சரக்கு அனுப்புநர், கலன் செயற்படுத்தப்படாப் பொதுக் காவுநர் மற்றும் கொள்கலம் செயற்படுத்துநர்களின் தொடர்ச்சியான ஒழுங்குறுத்துகையை உறுதிப்படுத்துகின்றது.

## 4. இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம்

இல.: 2026 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கம்

அந்தஸ்து: அறிமுகம் செய்யப்பட்டுள்ளது (முதலாம் மதிப்பீடு) – 20 சனவரி 2026

நோக்கம்: சட்டவிரோத வெளியேற்றுகையைத் தடுத்தல்

பிரதான ஏற்பாடுகள்:

- "இருப்பாட்சியாளரை" வரையறுப்பதுடன் ஒரு நீதிமன்றக் கட்டளை இன்றி வெளியேற்றப்படுவதிலிருந்து சட்டமுறையான இருப்பாட்சியில் இருக்கின்ற தனியாட்களைப் பாதுகாக்கின்றது
- இருப்பாட்சியாளர்களைப் பலவந்தமாக வெளியேற்றுவதற்காக வாழ்வசதிகளை நிறுத்துதல் அல்லது அத்தியாவசிய சேவைளை அகற்றுதல் ஆகியவற்றை மேற்கொள்வதிலிருந்து நிலக்கிழார்களைத் தடுக்கின்றது.
- வாழ்வசதிகளை மீட்டெடுத்தல் அல்லது உடைமைகளைப் பாதுகாத்தல் என்பவற்றிற்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பிப்பதற்கான உரிமையை இருப்பாட்சியாளர்களுக்கு ஏற்பாடு செய்கின்றது.
- காலவரிசை, கேட்புகள், மற்றும் துரிதப்படுத்தப்பட்ட நிவாரணப் பொறிமுறைகள் உள்ளடங்கலான வெளியேற்றுகைப் பிணக்குகளுக்கான நடைமுறைசார் விதிகளைத் தாபிக்கின்றது.
- இருப்பாட்சியாளர்களின் பாதுகாப்பு தொடர்பான நீதிமன்ற அவமதிப்பு மற்றும் தடையேற்படுத்தலுக்கான தண்டங்களை விதித்தல்.

## 5. பாராளுமன்ற ஓய்வூதியம் (நீக்குதல்) சட்டமூலம்

இல.: 2026 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம்

அந்தஸ்து: அறிமுகம் செய்யப்பட்டுள்ளது (முதலாம் மதிப்பீடு) – 7 சனவரி 2026

நோக்கம்:1977 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்ற ஓய்வூதியச் சட்டத்தை நீக்குதல்

பிரதான ஏற்பாடுகள்:

- 1977 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்ற ஓய்வூதியச் சட்டத்தை நீக்குகின்றது.
- அந்தச் சட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான அனைத்து ஓய்வூதிய உரித்துக்களையும் இல்லாததாக்கின்றது.
- பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் நியதிச்சட்ட ஏற்பாடுகளை நீக்குகின்றது.
- தற்போதைய மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதிய உரிமைகளின் நடத்துகையைக் குறித்துரைக்கின்றது.
- ஏனைய நியதிச்சட்டங்களுடன் சட்டரீதியான ஒத்திசைவைக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்துவதற்கான நிலைமாறுகால ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது

## 6. யூஎன்வீ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம்

இல.: 2026 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்கம்

அந்தஸ்து: வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது – 9 சனவரி 2026

நோக்கம்: யூஎன்வீ மன்றத்தினைக் கூட்டிணைத்தல்

பிரதான ஏற்பாடுகள்:

- இடையறா வழியுரிமை கொண்ட சட்டத் தரப்பு ஒன்றாக யூஎன்வீ மன்றத்தினைக் கூட்டிணைக்கின்றது.
- மன்றத்தின் குறிக்கோள்கள், தத்துவங்கள் மற்றும் தொழிற்பாடுகளைக் குறித்துரைக்கின்றது.
- சபையின் ஆக்கவமைப்பு மற்றும் பணிகள் உள்ளடங்கலாக ஆளுகை மற்றும் முகாமைத்துவக் கட்டமைப்பைத் தாபிக்கின்றது.
- மன்றத்தின் பங்குபற்றுநர்களின் உறுப்புரிமை மற்றும் கடப்பாடுகளை வரையறுக்கின்றது.
- நிர்வாகம், நிதியளித்தல், இணக்கம், மற்றும் அறிக்கையிடல் ஆகியவை தொடர்பான இடைநேர்விளைவான ஏற்பாடுகளை வழங்குகின்றது.

•

## III. தெரிவு செய்யப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்கள்

### விவசாயம், கால்நடைகள், காணி மற்றும் நீர்ப்பாசனம்

- **மகாவலி அதிகாரசபையின் பண்ணைகளை உள்ளூர் விவசாயிகளுக்கு வழங்குதல்** (26 சனவரி 2026)
  உற்பத்தித்திறன், தேசிய விதை நெல் வழங்கல், மற்றும் சமுதாய வாழ்வாதாரங்கள் என்பவற்றை மேம்படுத்துவதற்காக, அவற்றின் காணி உரிமையை அதிகாரசபை பேணிக்கொண்டு, 17 மகாவலி அதிகாரசபைப் பண்ணைகளை உள்ளூர் விவசாயிகளுக்குக் குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

  இது இளம் விவசாயத் தொழில்முயற்சியாளர்களையும் நிலைபெறுதகு விவசாயத்தையும் ஊக்குவிக்கின்றது.

- **அரச காணி மற்றும் காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டங்களின் கீழான சுற்றறிக்கைகளின் திருத்தம்** (26 சனவரி 2026)
  முதலீட்டாளர்களின் ஈடுபாட்டை ஒருமுகப்படுத்துவதற்காக அரசாங்கக் காணிகளின் காணி ஒதுக்கீட்டு நடைமுறைகள், கொடைப்பத்திரங்களின் வெளியீடு, வரிக் கணக்கீடுகள், மற்றும் கட்டணங்கள் என்பவற்றை இற்றைப்படுத்துவதற்காக நிபுணர்கள் குழு ஒன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

  இது முதலீட்டு நடைமுறைகளை இலகுபடுத்துவதுடன், அதிகாரத்துவத் தாமதங்களையும் குறைக்கின்றது.

- **கிவுல் ஓயா நீர்த்தேக்க அபிவிருத்திக் கருத்திட்டத்தை மீள ஆரம்பித்தல் (**19 சனவரி 2026)
  முல்லைத்தீவு மற்றும் வவுனியாவில் நீர்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காகவும் பிராந்திய அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காகவும், 2031 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்யப்படுமாறு, திருத்தப்பட்ட 23,436 பில்லியன் ரூபா வரவுசெலவுத்திட்டத்துடன், (2023 ஆம் ஆண்டில் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட) கிவுல் ஓயா கருத்திட்டத்தை மீள ஆரம்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது. உள்ளூர் நிதிகளைப் பயன்படுத்துகின்றது; இந்தக் கருத்திட்டம், அடிப்படையில் 2011 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டது.

- **சம்பா மற்றும் கீரி சம்பா நெல் கொள்வனவு செய்வதற்கான குறைந்தபட்ச விலையை அதிகரித்தல் (**12 சனவரி 2026)
  நாடு அரிசியின் குறைந்தபட்ச கொள்வனவு விலையை ரூ. 120 ஆகப் பேணும் அதேவேளை, அத்தகைய நெல் வகைகளின் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு, சம்பாவின் விலையை ரூ. 125 இலிருந்து ரூ. 130 ஆகவும், கீரி சம்பாவின் விலையை ரூ. 132 இலிருந்து ரூ. 140 ஆகவும் அதிகரிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது. இந்த விலைகள், விலைக் குழு மற்றும் உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு என்பவற்றின் விதப்புரைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

- **பேரிடரால் பாதிக்கப்பட்ட மிளகு, கோப்பி, மற்றும் ஏலக்காய் பயிர்ச்செய்கைகளுக்கு சலுகைகளை வழங்குதல்** (5 சனவரி 2026)
  நீண்ட கால ஏற்றுமதிப்பயிர்களின் மீட்டெடுப்பிற்காக, பயிர்களை மீளப்பயிரிடுவதற்கென ஒரு ஹெக்டேயருக்கு ரூ. 425,000 வரையான படிகளை வழங்குவதற்கும், ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் ஊடாக இலவசமான கன்றுகளை வழங்குவதற்கும் அங்கீகாரம் வழங்கியது. ஏற்றுமதி விவசாயத்துறையின் மீட்டெடுப்பிற்கு இது ஆதரவு வழங்குகின்றது.

### நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி

- **அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் மனிதவளப் பயன்பாடு மீதான புதிய சுற்றிக்கைகளை வெளியிடுதல்** (26 சனவரி 2026)
  01/2019 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையை நீக்கியதுடன் அரசாங்கத்தின் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் வினைத்திறன் வாய்ந்த நடைமுறைப்படுத்தல் மற்றும் மனித/பௌதிக வளங்களின் அதியுச்ச பயன்பாடு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக இற்றைப்படுத்தப்பட்ட சுற்றறிக்கைகளையும் வெளியிட்டது. காலத்திற்கு உகந்த கருத்திட்டங்களை வழங்குதல் மற்றும் மூலதன செலவினப் பயன்கள் என்பவற்றில் கவனம் செலுத்துகின்றது.

- **வருமானப் பாதுகாப்பு மற்றும் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுக் கட்டளைகளைப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்** (26 சனவரி 2026)
கலப்பின வகை மன்டரின் மீதான திருத்தப்பட்ட அறவீடு அத்துடன் உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் என்பவற்றின் மீதான அறவீட்டின் தொடர்ச்சி உள்ளடங்கலாக, 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வருமானப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் என்பவற்றின் கீழான கட்டளைகளை/ ஒழுங்குவிதிகளை சமர்ப்பித்தது. வரி விதிப்பு நடவடிக்கைகள் மற்றும் டித்வா சூறாவளிக்குப் பிந்திய நிவாரண நன்கொடைகள் ஆகியவற்றிற்கான சட்ட அங்கீகாரத்தை உறுதிப்படுத்துகின்றது.
- **இலங்கைக் காப்புறுதி நிறுவனத்திற்கான வரைவுச் சட்டமூலம்** (19 சனவரி 2026)
பயனுறுதியுடனும் நிதி ரீதியாக நிலைபெறுதன்மையுடனும் தொழிற்படுவதற்காகத் தத்துவங்களை வழங்கி, இலங்கைக் காப்புறுதி நிறுவனத்தைக் கூட்டிணைக்கும் வரைவுச் சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு அறிவுறுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கியது. நிறுவனத்தை காப்புறுதி ஒழுங்குறுத்துகை ஆணைக்குழுவின் தேவைப்பாடுகளுடன் நேரொத்ததாக ஆக்குகின்றது; காப்புறுதி முகவர்களுக்கு உரிமம் வழங்குவதற்கு இது அத்தியாவசியமானதாகும்.
- **பணவீக்கம் (surface inflation) குறைவடைந்தமை மீதான அறிக்கையைப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்** (19 சனவரி 2026)
தொடர்ச்சியாக இரண்டு காலாண்டுகள் இலக்கிற்குக் குறைவாகக் காணப்பட்டதையடுத்து, Q2 & Q3 2025 (-1.1% & 0.8%) இற்கான காலாண்டு பணவீக்கம் மீதான அறிக்கையை, மத்திய வங்கிச் சட்டத்தின் 26(5) ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது. வெளிப்படைத்தன்மை மற்றும் பணவீக்க அறிக்கையிடலுக்கான பொதுமக்களின் அணுகல் என்பவற்றைப் பேணுகின்றது.
- **நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள், AML, மற்றும் பயங்கரவாத நிதியளிப்பிற்கான திருத்தங்கள் மீதான வரைவுச் சட்டமூலங்களைச் சமர்ப்பித்தல்** (12 சனவரி 2026)
நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம், பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம், மற்றும் பயங்கரவாத நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டம் என்பவற்றிற்கான வரைவுத் திருத்தங்களை வர்த்தமானியில் வெளியிட்டதன் பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது. சட்டத்துறைத் தலைமையதிபதியின் தடைநீக்க அனுமதி பெறப்பட்டுள்ளது; முன்னைய அமைச்சரவை அங்கீகாரத்தைத் (26 மே 2025) தொடர்கின்றது.
- **அரச தனியார் பங்குடமையின் கீழ் பயனுள்ள நோக்கங்களுக்காக அரசாங்கத்திற்குச் சொந்தமான பங்களாக்கள்/ வீடுகளைப் பயன்படுத்தல்** (5 சனவரி 2026)
தூதரகங்கள், சர்வதேச அமைப்புகள், boutique ஹோட்டல்கள், மற்றும் ஏனைய பயனுள்ள முதலீட்டுக் கருத்திட்டங்களுக்காக, 24 பங்களாக்கள் மற்றும் வீடுகளை 30 வருடங்களுக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான ஆர்வ வெளிப்பாடுகளைக் கோருவதற்கு அங்கீகாரம் வழங்கியது. 2024 ஆம் ஆண்டு டிசம்பரில் நியமிக்கப்பட்ட அலுவலர்களின் குழுவின் விதப்புரைகளைப் பின்பற்றுகின்றது.
- **தேசிய லொத்தர் சபைக்கான புதிய சட்டம் ஒன்றின் அறிமுகம்** (5 சனவரி 2026)
தேசிய லொத்தர் சபைச் சட்டத்தை (1963 இல் தாபிக்கப்பட்டது) இற்றைப்படுத்துவதற்காக புதிய திருத்தங்களை உள்ளடக்கிய வரைவுச் சட்டமூலத்தை இறுதி செய்வதற்கு சட்ட வரைஞருக்குப் பணிப்பு விடுப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது. நவீன சந்தைத் தேவைகளைச் சந்திப்பதற்காக தற்போதுள்ள லொத்தர் சட்டகத்தை மறுசீரமைக்கின்றது.
- **ஐக்கிய அமெரிக்கக் குடியரசுக்கான தபால் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக உலகத் தபால் ஒன்றியத்தின் தபால் வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்தல்** (19 சனவரி 2026)
இலங்கை வியாபாரங்களுக்கான 800 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் என்னும் ஆகக்குறைந்த விலக்களிப்பு நீக்கத்தின் தாக்கத்தைத் தணிப்பதற்காக, ஐக்கிய அமெரிக்கக் குடியரசுக்கு அனுப்பப்படும் தபால் பொருட்களுக்கான தீர்வைக் கொடுப்பனவிற்கு வசதி செய்வதற்காக உலகத் தபால் ஒன்றியத்தின் தபால் வழிகாட்டல்களைப் பின்பற்றுவதற்கு அங்கீகாரம் வழங்கியது. இலத்திரனியல் வணிக ஏற்றுமதியாளர்களுக்கு ஆதரவு வழங்குவதுடன், சர்வதேச தபால் ஒழுங்குவிதிகளுடனான இணக்கத்தையும் பேணுகின்றது.

•

## சுகாதாரம்

- **மாத்தறை பொது வைத்தியசாலையை மீளத் திறப்பதற்கான சாத்தியத் தகவாய்வு** (26 சனவரி 2026)
  முன்னைய மருத்துவ உபகரணப் பிரிவின் அபிவிருத்திக் கடன் கருத்திட்டத்தை இரத்துச் செய்ததுடன், மாத்தறை பொது வைத்தியசாலையை மீளத் திறப்பதற்கான சாத்தியத் தகவாய்வு ஒன்றினை மேற்கொள்வதற்கு கொரிய எக்ஸிம் (Korean Ex-Im) வங்கியிடமிருந்து நிதிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அங்கீகாரம் வழங்கியது. வைத்தியசாலையின் மீள் அபிவிருத்தியைத் தற்போதுள்ள தேசிய சுகாதாரத் தேவைப்பாடுகளுடன் நேரொத்ததாக்குவதில் கவனம் செலுத்துகின்றது.
- **ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பில் உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு ஆகியவற்றின் முகாமைத்துவத்திற்கான கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்** (12 சனவரி 2026)
  எஞ்சியுள்ள 1 ஆம் கட்ட நிதிகள் மற்றும் 'Resolve to Save Lives' நிறுவனத்தினால் வழங்கப்படும் 242,125 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் மானியம் என்பவற்றைப் பயன்படுத்தி, காலி, கொழும்பு, மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கருத்திட்டங்களின் விரிவாக்கத்திற்கு அங்கீகாரம் வழங்கியது. களுத்துறை, கண்டி, நுவரெலியா, மற்றும் மாத்தளை மாவட்டங்களின் வெற்றிகரமான முன்னோடிகளைப் பின்பற்றி முன்னெடுக்கப்படுகின்றது.
- **மருத்துவ விநியோகங்களுக்காக செலுத்தப்படாதுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துதல் (2008–2023)** (12 சனவரி 2026)
  2018, சனவரி 1 தொடக்கம் 2023, டிசம்பர் 31 வரையான காலப்பகுதிக்குரிய 23.87 பில்லியன் ரூபா கொடுப்பனவுகளை தவணைக்கட்டணங்களாகச் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கியது; 2008 – 2017 காலப்பகுதிக்குரிய தொகை கணக்கிடப்பட்டு வருகின்றது. அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்திடமிருந்தான நிலுவைத் தொகைகளை நிவர்த்தி செய்கின்றது.
- **செயலாற்றுகை அடிப்படையிலான கொடுப்பனவு முறைமையுடன் அரச தனியார் பங்குடமையின் கீழ் அரசாங்க வைத்தியசாலைகளில் நோய்களை நிர்ணயிக்கும் உபகரணங்களைப் பயன்படுத்தல்** (5 சனவரி 2026)
  காத்திருப்புக் காலங்களை குறைப்பதற்கும் அணுகலை மேம்படுத்துவதற்கும் அரச தனியார் பங்குடமையின் கீழ் சேவைகளையும் உபகரணங்களையும் (CT, MRI, DSA, cardiac cath அலகுகள், மற்றும் தானியங்கிப் பகுப்பாய்விகள்) பெற்றுக்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கியது. நிதி/பெறுகைக் கட்டுப்பாடுகளை முறியடிக்கும் அதேவேளை உயர்தர நோய் நிர்ணய சேவைகளுக்கான சமமான அணுகலையும் உறுதிப்படுத்துகின்றது.
- **அரசாங்க வைத்தியசாலைகளில் அரச தனியார் பங்குடமையின் கீழ் இரத்தச் சுத்திகரிப்பு சேவைகளை விரிவுபடுத்தல்** (5 சனவரி 2026)
  இனங்காணப்பட்ட வைத்தியசாலைகளின் இரத்தச் சுத்திகரிப்பு சேவைகளின் விரிவாக்கத்திற்கான அரச தனியார் பங்குடமைப் பொறிமுறைக்கு அங்கீகாரம் வழங்கியது. இயந்திரங்கள், நுகர்வுப் பொருட்கள், தொழிற்பாடு மற்றும் பராமரிப்பு என்பவற்றிற்கு தனியார் பங்காளர் நிதியளிப்பு வழங்குவர்; உட்கட்டமைப்பு மற்றும் மேற்பார்வையை அரசாங்கம் வழங்குகின்றது. வெற்றிகரமான கண்டி தேசிய வைத்தியசாலையின் மாதிரியைப் பின்பற்றி மேற்கொள்ளப்படுகின்றது; அதிகரித்து வரும் சிகிச்சைசார் தேவையை நிவர்த்தி செய்கின்றது.

## போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் நகர அபிவிருத்தி

- **பொழுதுபோக்குக் கருத்திட்டங்களுக்காக தியவன்ன ஓயா காணியை (வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டல், பத்தரமுல்லை) விடுவித்தல்** (26 சனவரி 2026)
  போட்டி முறையிலான பெறுகைச் செயன்முறையைப் பயன்படுத்தி, தியவன்ன ஓயாவிற்கு இருபுறத்திலும் அமைந்துள்ள 13.57 ஏக்கர்களை 'Frolic Island Recreational Hub' இனை அமைப்பதற்காகக் குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக முதலீட்டு முன்மொழிவுகள் கோரப்படுவதற்கு அங்கீகாரம் வழங்கியது. இது வெள்ளத் தடுப்பு மற்றும் நகர அபிவிருத்தி முன்னெடுப்புகளின் பகுதியாகும்.

- **கலப்பு அபிவிருத்திக்காக கொழும்பு 03, பாலதக்ஷ மாவத்தையிலுள்ள காணியை விடுவித்தல்** (26 சனவரி 2026)
  கொழும்பில் அதியுயர் கலப்புப் பயன்பாட்டு அபிவிருத்திக் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக, போட்டி முறையிலான பெறுகைச் செயன்முறையைப் பின்பற்றி, 0.42 ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ள காணித்துண்டு ஒன்றினை 99 வருடகாலக் குத்தகைக்கு விடுவிப்பதற்கு முன்மொழிவுகளைக் கோருவதற்கு அங்கீகாரம் வழங்கியது. நகர அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பெறுகை விதிகளுடன் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்துகின்றது.
- **நுவரெலியா, டன் புறவழியில் பூங்கா ஒன்றினை அமைப்பதற்காகக் காணி விடுவிப்பு** (26 சனவரி 2026)
  சுற்றுலாப் பயணிகளை கவரும் பொழுதுபோக்குக் கருத்திட்டம் ஒன்றாகத் தாபிப்பதற்காக, கிறகரி வாவியை அடுத்துள்ள 10.97 ஏக்கர்களை 50 வருட காலப்பகுதியொன்றிற்குக் குத்தகைக்கு வழங்குவதற்காக முன்மொழிவுகளைக் கோருவதற்கு அங்கீகாரம் வழங்கியது. சர்வதேச போட்டித்தன்மை வாய்ந்த பெறுகை முறைமையியலைப் பின்பற்றுகின்றது.
- **ஆவரங்கால் - தொண்டமனாறு (B-033) வீதி புனரமைப்பு** (26 சனவரி 2026)
  சமூக-பொருளாதார அணுகலை மேம்படுத்தல், போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல், மற்றும் பிரதான வசதிகளை இணைத்தல் என்பவற்றிற்காக, வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கான ஒப்பந்தத்தை M/s Nem Construction (Pvt.) Ltd இற்கு அளிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது. தேசிய ரீதியில் போட்டித்தன்மை முறையிலான விலைமனுக்கோரல் மற்றும் உயர் மட்ட பெறுகைக் குழுவின் விதப்புரைகள் என்பவற்றை இக்கருத்திட்டம் பின்பற்றியது.
- **2025 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க மோட்டார் வாகனப் போக்குவரத்து (சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலத்தைத் தற்காலிகமாக நீடித்தல்) ஒழுங்குவிதிகள்** (26 சனவரி 2026)
  2025 நவம்பரில் காலநிலை சார்ந்த மற்றும் தொழில்நுட்பப் பிரச்சினைகளின் காரணமாக அனுமதிப்பத்திரங்களின் புதுப்பித்தலில் ஏற்பட்ட தாமதங்களை நிவர்த்தி செய்வதற்காக தற்காலிக நீடிப்பு ஒழுங்குவிதிகள் பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டன. அவை வீதிப் பாதுகாப்பு மீதான தாக்கத்தைத் தடுக்கின்றது; அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் தன்மையை 1 மாத காலத்தினால் நீடிக்கின்றது.
- **பேஸ்லைன் வீதிக் கருத்திட்டத்தின் III ஆம் கட்டத்தை நடைமுறைப்படுத்தல்** (19 சனவரி 2026)
  போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல், நகர்ப்புற நடமாட்டத்தை மேம்படுத்துதல், அத்துடன் பொருளாதார உற்பத்தித்திறனை அதிகரித்தல் என்பவற்றிற்காக கிருலப்பனை சந்தியிலிருந்து துட்டகைமுனு மாவத்தை வரையிலான 0.86 கி.மீ ஆறுவழிப் பாதையின் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது. தேவைப்படும் காணிகளில் 90% ஆனவை ஏற்கனவே பெறப்பட்டுள்ளன; தேசிய வீதிப் பெருந்திட்டத்தினைப் பின்பற்றுகின்றது.
- **டித்வா சூறாவளிக்குப் பிந்திய மீள்நிர்மாணத்திற்கான மதியுரை சேவைகளுக்கான நிறுவனங்களின் தெரிவு** (12 சனவரி 2026)
  டித்வா சூறாவளிக்குப் பின்னர் தகுதிவாய்ந்த மதியுரை நிறுவனங்களை 02 வருடங்களுக்கு பதிவு செய்தல் அத்துடன் வீதி, புகையிரத, மற்றும் சேவை உட்கட்டமைப்பு என்பவற்றின் மீள்நிர்மாணத்தை நடைமுறைப்படுத்துவதற்கான போட்டி முறையிலான விலை கோரல் என்பவற்றிற்கு அங்கீகாரம் வழங்கியது. திட்டமிடல், மேற்பார்வை, மற்றும் கணிப்பீடுகள் என்பவற்றிற்கான தொழில்வாண்மை மிக்க பணியாட்டொகுதியினரின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்கின்றது.
- **அரசாங்கத் திணைக்களங்களிலுள்ள பயன்படுத்தப்பட முடியாத உருக்குப் பொருட்களை அகற்றுதல்** (12 சனவரி 2026)
  NCB மற்றும் பெறுகை மேன்முறையீட்டுச் சபையின் விதப்புரைகளை அடிப்படையாகக்கொண்டு, 114.51 மில்லியன் ரூபா பெறுமதியான பயன்படுத்தப்பட முடியாத உருக்குப் பொருட்களை அகற்றுதலை M/s. S R Steel (Pvt.) Ltd இற்குக் கையளிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது. பல்வேறு உருக்குப் பொருட்களுக்கான முன்கூட்டிய அங்கீகாரத்தையும் உள்ளடக்குகின்றது.
- **மஹிய்யாவ புகையிரதப் பாதைக்குக் குறுக்கே தரைக்கீழ் பாலமொன்றை (A-009) நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தைக் கையளித்தல்** (5 சனவரி 2026)
  NCB மற்றும் உயர் மட்ட நிலையியற் பெறுகைச் சபையின் விதப்புரைகளைத் தொடர்ந்து, ரூ. 699.58 மில்லியனுக்கான (வரியின்றி) ஒப்பந்தத்தை M/s NEM Construction (Pvt) Ltd இற்குக் கையளிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது. இது கண்டி - யாழ்ப்பாண வீதி உட்கட்டமைப்பின் மேம்பாட்டிற்கான நிர்மாணமாகும்.

- 
- **மோட்டார் வாகனத் திணைக்களத்திற்கான வாகன இலக்கத் தகடுகளின் பெறுகை** (5 சனவரி 2026)
  NCB மற்றும் பெறுகை மேன்முறையீட்டுச் சபையின் விதப்புரைகளை அடிப்படையாகக்கொண்டு, 05 வருட காலப்பகுதிக்கு இலக்கத்தகடுகளை வழங்குவதற்கு M/s South Asian Technologies நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கியது. வாகனப் பதிவு உட்கட்டமைப்பின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துகின்றது.
- **2022 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க மோட்டார் வாகனங்கள் (சாரதி உரிம அறவீடு) ஒழுங்குவிதிகளின் திருத்தம்** (5 சனவரி 2026)
  தற்காலிக சாரதி உரிமக் கட்டணங்கள் மீதான திருத்தம் செய்யப்பட்ட ஒழுங்குவிதிகளை (பண்டாரநாயக்க விமான நிலைய சேவை) பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது. கட்டணங்களை ரூ. 2,000 ஆக இற்றைப்படுத்துகின்றது; சேவையின் நிலைபெறுதன்மையை உறுதிப்படுத்துகின்றது.

## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி

- கைத்தொழில் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் நியமனம் (26 சனவரி 2026)
  திருமதி டில்கி வத்சலா மாரம்பகே அவர்களைப் பணிப்பாளர் நாயகமாக முழு நேர அடிப்படையில் நியமிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது. வெற்றிடமாகவுள்ள பதவியை நிரப்புகின்றது; இந்த உத்தியோகத்தர் இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்தவராவார்.
- 2026 ஆம் ஆண்டில் பாடசாலை எழுதுகருவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டம் (12 சனவரி 2026)
  தகுதி வாய்ந்த அஸ்வெசும பயனாளர் குடும்பங்கள், சிறிய பாடசாலைகள், பிரிவெனா மாணவர்கள், மற்றும் சிறுவர் அபிவிருத்தி நிலைய மாணவர்களுக்கு பாடசாலை எழுதுகருவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக பிள்ளை ஒருவருக்கு ரூ. 6,000 என்னும் வகையில் கொடுப்பனவை வழங்குவதைத் தொடர்வதற்கு அங்கீகாரம் வழங்கியது. 2025 இன் முன்னெடுப்பினைத் தொடர்கின்றது. (5 சனவரி 2026)

- **இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொள்ளல்** (5 சனவரி 2026)
  கல்விசார் ஆராய்ச்சி ஒத்துழைப்பு, பரிமாற்றங்கள், மற்றும் கூட்டுக் கருத்தரங்குகள் என்பவற்றை மேம்படுத்துவதற்காக இலங்கைப் பிக்கு பல்கலைக்கழகம் மற்றும் மஹாமகுட் பௌத்த பல்கலைக்கழகம் (தாய்லாந்து); இலங்கைப் பிக்கு பல்கலைக்கழகம் மற்றும் நாலந்தா நிறுவனம் (ஜகார்த்தா); கொழும்புப் பல்கலைக்கழகம் மற்றும் SGH வொர்சோ பொருளாதாரக் கல்லூரி (போலந்து) ஆகியவற்றிற்கிடையில் 5 வருடகால புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கியது. கல்வித் தராதரங்கள், சர்வதேச வெளிப்படுத்தல், மற்றும் ஆராய்ச்சி கூட்டிணைவுகள் என்பவற்றை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றது.

## பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்கள்

- பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான சட்டங்களின் அறிமுகம் மற்றும் திருத்தம் (26 சனவரி 2026)
  பின்வருவனவற்றின் அங்கீகரிக்கப்பட்ட அறிமுகம்: சிறுவர்களுக்கெதிரான இணையவழிக் குற்றச் செயல்கள் சட்டம், சிறுவர் உரிமைகள் சட்டம், புதிய குடும்ப வன்முறைச்செயல் சட்டம், வளர்ப்புப் பெற்றோர் பாதுகாப்புச் சட்டம், அத்துடன் தற்போதுள்ள பல்வேறு சிறுவர் தொடர்பான கட்டளைச்சட்டங்களுக்கான திருத்தங்கள். உள்நாட்டுச் சட்டவாக்கத்தை ஐக்கிய நாடுகளின் சமவாயங்கள் மற்றும் நவீன சட்டத் தராதரங்களுடன் நோரொத்ததாக்கின்றது.

## சுற்றாடல்

- கலிடோ கடற்கரை நிலப்பரப்பு மற்றும் களு கங்கை முகத்துவாரத்தைப் புனரமைத்தல் (26 சனவரி 2026)

  மணல் திட்டுகளை புனரமைத்தல், ஆற்றின் முகத்துவாரத்தை ஸ்திரப்படுத்தல், அத்துடன் கடற்கரையில் ஏற்படும் கடலரிப்பு, களப்பு மாசடைதல், மற்றும் சுற்றாடல் அக்கறைகள் ஆகியவற்றை நிவர்த்தி செய்தல் என்பவற்றிற்கான கருத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கியது. இலங்கைக் காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்; சுற்றுலாத்துறை மற்றும் உட்கட்டமைப்பைப் பாதுகாக்கின்றது.

## துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து

- **இலங்கைத் துறைமுகங்கள் மற்றும் விநியோக அபிவிருத்திக் கருத்திட்டத்திற்காக நடைமுறைப்படுத்தும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுதல்** (26 சனவரி 2026)

  3 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் மானியம் ஒன்றைப் பெறுவதற்காக IBRD உடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுதல் அத்துடன் தொழிற்பாட்டு, தொழில்நுட்ப, நிதி, மற்றும் பெறுகை சார்ந்த அம்சங்களைக் கண்காணிப்பதற்கும், முகாமை செய்வதற்குமெனக் கருத்திட்ட முகாமைத்துவ அலகு ஒன்றினைத் தாபித்தல் என்பவற்றிற்கு அங்கீகாரம் வழங்கியது. உட்கட்டமைப்பை நவீனமயப்படுத்தல் மற்றும் வழங்கல்களின் திட்டமிடல் என்பவற்றிற்கு ஆதரவு வழங்குகின்றது.

- **பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் நாணயமாற்றுக் கருமபீடங்களைச் செயற்படுத்தல்** (12 சனவரி 2026)

  பெறுகை விதப்புரைகளை அடிப்படையாகக்கொண்டு, 3 வருட காலப்பகுதிக்கு வருகை முனையத்தில் 5 நாணயமாற்றுக் கருமபீடங்களை அமைப்பதற்கான ஒப்பந்தங்களை கொமர்ஷல் வங்கி, இலங்கை வங்கி, தோமஸ் குக் லங்கா, சம்பத் வங்கி, மற்றும் மக்கள் வங்கி என்பவற்றிற்கு அளிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது. விமானநிலையத்தின் மீள் அபிவிருத்தி மற்றும் பயணிகள் சேவை என்பவற்றிற்கு ஆதரவு வழங்குகின்றது.

## கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல்

- **2026 இன் 'பிரஜாசக்தி' வறுமை ஒழிப்பு இயக்கத்திற்கான நடைமுறைப்படுத்தல் நடைமுறை** (26 சனவரி 2026)

  2030 ஆம் ஆண்டளவில் 5 அலகுகளாக பல்பரிமாண வறுமையைக் குறைப்பதற்கு ஆறு துறைகளில் மாவட்ட மற்றும் தேசிய மட்டக் கருத்திட்டங்களுக்காக 25 பில்லியன் ரூபா ஒதுக்கீட்டிற்கு அங்கீகாரம் வழங்கியது. பயிற்சி, ஆராய்ச்சி, மற்றும் சமுதாய மட்டக் கருத்திட்ட நடைமுறைப்படுத்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

- **திரிபோஷ நிகழ்ச்சித்திட்டத்திற்காக மீண்டெழுந்தன்மையுடைய உயர்தர சோளம் சார்ந்த உணவு முறைமையைக் கட்டியெழுப்புதல்** (5 சனவரி 2026)

  உலக உணவுத் திட்டத்தின் ஒத்துழைப்புடன் திரிபோஷ நிகழ்ச்சித்திட்டத்தின் தரம் மற்றும் சோளத்தின் வழங்கல் சங்கிலி என்பவற்றை மேம்படுத்துவதற்கான கருத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கியது; KOICA இடமிருந்து 10 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் மானியம்; அனுராதபுரம், மொனராகலை, மற்றும் பதுளையைச் சேர்ந்த ~7,500 விவசாயிகளுக்குப் பயனளிக்கின்றது; 2025-2029 வரை நடைமுறைப்படுத்தப்படும். கலந்துரையாடற் பத்திரங்கள் மற்றும் விசாரணை நியதிகள் என்பவற்றில் கைச்சாத்திடுவதையும் உள்ளடக்குகின்றது.

•

## டிஜிட்டல் பொருளாதாரம்

- தன்னியக்க Spectrum முகாமைத்துவ முறைமையின் (ASMS) பெறுகை (26 சனவரி 2026)
  தேசிய அலைவரிசை முகாமைத்துவத்திற்காக, இரண்டு தசாப்தகாலப் பழமை வாய்ந்த SPECTRAplus முறைமையைப் பதிலீடு செய்து, நவீன தன்னியக்க முறைமை ஒன்றினைக் கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கியது. வினைத்திறன், ஒழுங்குறுத்துகையுடனான இணக்கம், மற்றும் டிஜிட்டல் சேவைகளுடனான ஒருங்கிணைப்பு என்பவற்றை மேம்படுத்துகின்றது.

## கைத்தொழில்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி

- **பாறைப் பொஸ்பேற்றிற்கான (Rock Phosphate) பெறுமதி சேர்க்கும் கருத்திட்டம்** (26 சனவரி 2026)
  லங்கா பொஸ்பேட் நிறுவனத்தினால் அகழ்ந்தெடுக்கப்படும் பொஸ்பேற்றிற்கு பெறுமதி சேர்க்கும் பொருட்டு, அரச தனியார் பங்காண்மை ஒன்றிற்காகத் தெரிவு செய்யப்பட்ட முதலீட்டாளர்களிடமிருந்து கருத்திட்ட முன்மொழிவுகளைக் கோருவதற்கு அங்கீகாரம் வழங்கியது. 2025 ஆகஸ்ட் மாதத்தின் அமைச்சரவைத் தீர்மானத்தின் மீது கட்டமைக்கப்படுகின்றது; 14 முதலீட்டாளர்களின் ஆர்வ வெளிப்படுத்தல்கள் கிடைக்கப்பெற்றன.
- **பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் தெரிவு செய்யப்பட்ட இடங்களை அபிவிருத்தி செய்தல்** (12 சனவரி 2026)
  பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் தெரிவு செய்யப்பட்ட இடங்களை அரச தனியார் பங்குடமையின் கீழ் சுற்றுலாரீதியில் கவரக்கூடிய இடங்களாக அபிவிருத்தி செய்வதற்கான முன்மொழிவுகளைக் கோருவதற்கு அங்கீகாரம் வழங்கியது. பொருத்தமான முதலீட்டாளர்களை அடையாளம் காண்பதற்கு விதித்துரைக்கப்பட்ட பெறுகை வழிகாட்டல்களைப் பின்பற்றுகின்றது.

## மீன்பிடி, நீரியல்வள மற்றும் சமுத்திர வளங்கள்

- **இந்து சமுத்திரக் கடலோர நாடுகளின் அமைப்பைத் தாபிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுதல்** (19 சனவரி 2026)
  டுனா மீன்பிடித் தொழிலின் நிலைபெறுதகு முகாமைத்துவம், மீன்வளத்தை மேம்படுத்தல், மற்றும் கரையோர சமுதாயங்களின் வாழ்வாதாரங்களுக்கு ஆதரவு வழங்குதல் என்பவற்றிற்கான அமைப்பைத் தாபிப்பதற்காக 11 இந்து சமுத்திர நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றினைக் கைச்சாத்திடுவதற்கு அங்கீகாரம் வழங்கியது. பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் உணவுப் பாதுகாப்பினை வலுப்படுத்துகின்றது.

- **தேசிய மீன்பிடி மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பிற்கான கொள்கையை நடைமுறைப்படுத்தல்** (12 சனவரி 2026)
  ஒப்புரவான நன்மைகள், நிலைபேறான முகாமைத்துவம், மற்றும் உரிய ஏனைய கொள்கைகளுடனான ஒருங்கிணைப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக, இற்றைப்படுத்தப்பட்ட தேசிய மீன்பிடி மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பிற்கான கொள்கையின் நடைமுறைப்படுத்தலுக்கு அங்கீகாரம் வழங்கியது. 'Vistas of Prosperity and Splendor' கொள்கைக்கு அமைவாக மீள்வரைவு தயாரிக்கப்பட்டது.

## பெருந்தோட்டங்கள் மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு

- **பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான 2026 இன் வரவுசெலவுத்திட்ட நிவாரணங்கள்** (19 சனவரி 2026)
  பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் நேரடி வங்கி வைப்புகளைப் பயன்படுத்தி, 2026 சனவரி 1 ஆம் திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை (நாளாந்த ஊதியம் ரூ. 1,550 + வருகைக்கான கொடுப்பனவு ரூ. 200) வழங்குவதற்கான முறைமையியலுக்கு அங்கீகாரம் வழங்கியது. 2026 ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்டத்தில் ரூ. 5,000 மில்லியன்

ஒதுக்கப்பட்டது; தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரங்களை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது.

- **குறைந்த பயன்பாட்டுடன் கூடிய காணிகளை/ உடமைகளை பொருத்தமான முதலீட்டாளர்களுக்கு வழங்குதல்** (12 சனவரி 2026)
  இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி, தேயிலை சக்தி நிதியம், மாரவல வத்த (40.48 ஹெக்டேயர்), மற்றும் கொண்டச்சி பெருந்தோட்டம் ஆகியவற்றிலுள்ள குறைந்த பயன்பாட்டுடன் கூடிய காணிகளை, பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றி முதலீட்டாளர்களுக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கியது. முன்கூட்டிய முதலாம் கட்ட அகற்றலில் இரண்டாம் கட்டத்திற்கான உடமைகள் உள்ளடக்கப்படவில்லை.

## வலுசக்தி

- **இலங்கை மின்சாரக் கைத்தொழிலின் ஆரம்பக் கைமாற்றல் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்** (12 சனவரி 2026)
  2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க மின்சார (திருத்த) சட்டத்தின் கீழ், ஆரம்பக் கைமாற்றல் திட்டத்தின் பிரகாரம், சொத்துக்கள், பொறுப்புகள், பணிகள், மற்றும் வகிபங்குகளை இலங்கை மின்சார சபையிடமிருந்து பின்னுரிமை நிறுவனங்களுக்குக் கைமாற்றுவதற்கு அங்கீகாரம் வழங்கியது. மின்சார உற்பத்தி, அனுப்பீடு, மற்றும் விநியோகம் என்பவற்றிற்கு ஆதரவு வழங்குகின்றது.

## வீடமைப்பு, நிர்மாணம், மற்றும் நீர் வழங்கல்

- **அரசாங்கக் கட்டடங்களுக்கான பொறியியல் மதிப்பீடுகளைத் தயாரித்தல்** (12 சனவரி 2026)
  அரசாங்கக் கட்டடங்களுக்கான பொறியியல் மதிப்பீடுகளுக்கான சட்ட அடிப்படையாக கட்டடங்கள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட பொதுவான கட்டடக் கட்டண அட்டவணையைப் பயன்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கியது. மத்திய அரசாங்கத்தின் அனைத்து நிறுவனங்களுக்குமிடையே ஒருமைப்பாட்டையும் செல்லுபடித்தன்மையையும் உறுதிப்படுத்துகின்றது.
- **சர்வதேச நீர்ச் சங்கத்தின் 2026 இற்கான நீர்ப் பாதுகாப்பு மாநாட்டை நடத்துதல்** (12 சனவரி 2026)
  நீர்ப் பாதுகாப்பு மற்றும் நிலைபெறுதகு அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக, 2026, மார்ச் 23 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை இரத்மலானையிலுள்ள NWSC Centre of Excellence இல் மாநாடு மற்றும் கண்காட்சி ஆகியவற்றை நடத்துவதற்கு அங்கீகாரம் வழங்கியது. உலக நீர் தினத்துடன் ஒருங்கிணைந்ததாக அமைகின்றது; சர்வதேச பங்குபற்றல்.

## பொது நிர்வாகம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சிகள்

- **அரச உத்தியோகத்தர்களுக்கான ஓய்வூதிய ஏற்பாடுகளின் திருத்தம்** (19 சனவரி 2026)
  2016 சனவரி 1 ஆம் திகதிக்குப் பின்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் ஓய்வூதிய உரித்தினையும் விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் என்பவற்றிற்கான பங்களிப்புகளையும் உறுதிப்படுத்தி, நியமனக் கடிதங்களைத் திருத்துவதற்கு அங்கீகாரம் வழங்கியது. 2016 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டோரின் ஓய்வூதிய உரிமைகளின் தெளிவு மற்றும் நடைமுறைப்படுத்தலை உறுதிப்படுத்துகின்றது.
- **மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபர் நியமனம் - காலி** (19 சனவரி 2026)
  அப்போதிருந்த அலுவலர் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, 2026 சனவரி 26 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு காலி மாவட்டத்தின் மாவட்டச் செயலாளராக திரு. கே. யூ. சந்திரலால்

•

அவர்களை நியமிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது. இவர் இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்தவராவார்; இது பிரதான நிர்வாகப் பதவி வெற்றிடத்தை நிரப்புகின்றது.

- **பகிரங்க சேவைக்கான ஆட்சேர்ப்பு மீதான குழு விதப்புரைகளை நடைமுறைப்படுத்தல்** (12 சனவரி 2026)
  பிரதம அமைச்சரின் செயலாளரின் தலைமையிலான உத்தியோகத்தர்களின் விதப்புரைகளை அடிப்படையாகக்கொண்டு, 20 அமைச்சுகள், மாகாண சபைகள், மற்றும் சேவைகள் என்பவற்றில், 23,344 ஆசிரியர்கள் உள்ளடங்கலான 26,095 உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அங்கீகாரம் வழங்கியது. மீளாய்வுக் குழுவின் பிரகாரம் முறைசார் ரீதியில் வெற்றிடங்கள் நிரப்பப்படுவதை உறுதி செய்கின்றது.
- **அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் விழா முற்பணத் தொகையை அதிகரித்தல்** (12 சனவரி 2026)
  விழாக்களுக்கும் புனித யாத்திரைகளுக்கும் வழங்கப்படும் விழா முற்பணத் தொகையை ரூ. 10,000 இலிருந்து ரூ. 15,000 ஆக அதிகரிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது. சுற்றறிக்கை அறிவுறுத்தல்களும் வெளியிடப்பட்டன. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான பயன்களை விரிவுபடுத்துகின்றது; 8 தவணைக் கட்டணங்களில் இது மீளச் செலுத்தப்படலாம்.

## சனாதிபதி செயலகம்

- **அரசாங்க வாகனங்களுக்கான எரிபொருள் வழங்கலுக்காக டிஜிட்டல் அட்டை முறையை அறிமுகம் செய்தல்** (12 சனவரி 2026)
  சனாதிபதி செயலகத்தில் உள்ள வாகனங்களின் குழுமத்திற்கான முன்னோடி டிஜிட்டல் அட்டை முறைமைக்கு அங்கீகாரம் வழங்கியதுடன் இது வெற்றிகரமாக அமையுமாயின், ஏனைய நிறுவனங்களுக்கும் இது விரிவுபடுத்தப்படும். வெளிப்படைத்தன்மை, வினைத்திறன், மற்றும் இணையவழி வங்கியியல் ஒருங்கிணைப்பு ஆகியவற்றை விரிவுபடுத்துகின்றது.

## பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்து

- **மனிதக் கடத்தலைக் கண்காணிப்பதற்கும் ஒழிப்பதற்குமான தேசிய மூலோபாயச் செயற்திட்டம் 2026-2030** (5 சனவரி 2026)
  நான்கு அணுகுமுறைகளுடன் புதிய தேசிய மூலோபாய செயற்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கியது: பாதுகாப்பு, வழக்குத் தொடுத்தல் (முறைப்பாடுகள்), பங்காண்மை, மற்றும் முன்னைய 2021 – 2025 திட்டத்தின் மீது கட்டமைத்தல். UNTOC மற்றும் Palermo ஒழுங்குமரபுக் கடப்பாடுகளுடன் இணங்கியொழுகுகின்றது.

## பொலிஸ், ஆயுதந்தாங்கிய படைகளுக்கான பெறுகை மற்றும் வசதிகள்

- **2026 ஆண்டில் முப்படைகளுக்குமான உணவுப் பொருட்களின் பெறுகை** (5 சனவரி 2026)
  NCB மற்றும் பெறுகை மேன்முறையீட்டுச் சபை என்பவற்றின் விதப்புரைகளை அடிப்படையாகக்கொண்டு, இராணுவம், கடற்படை, மற்றும் வான்படை ஆகியவற்றிற்காக பச்சை/உலர் உணவுப்பொருட்கள் மற்றும் ஏனைய உணவுப் பொருட்களைப் பெறுவதற்கு ஆகக்குறைந்த அனுசரணையான விலைகளை முன்வைத்த விலை மனுதாரர்களுக்குக் கையளிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது. 34 விலைமனுதாரர்களிடமிருந்து இராணுவத்திற்கு 1,219, கடற்படைக்கு 454, மற்றும் வான்படைக்கு 242 என்னும் எண்ணிக்கையிலான பெறுகைப் பொதிகளை உள்ளடக்குகின்றது.
- **இலங்கைப் பொலிசிற்காக 350 வீடமைப்பு அலகுகளின் கொள்வனவு** (5 சனவரி 2026)
  பொலிஸ் உத்தியோகத்தர்களுக்காக 'Harbour View Residencies' (452 அலகுகள், கொழும்பு 13) வீடமைப்பு அலகுகளைக் கொள்வனவு செய்வதற்கும் வாகனத்தரிப்பு வசதிகளை

நிர்மாணிப்பதற்கும் அங்கீகாரம் வழங்கியது. கொழும்புப் பறநகர்ப் பகுதிகளில் உத்தியோகத்தர்களின் வசிப்பிடம் மற்றும் தொழிற்பாட்டு வினைத்திறன் என்பவற்றை மேம்படுத்துகின்றது.

## இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு

- விளையாட்டுக் கட்டடத் தொகுதிகளுக்கான முகாமைத்துவச் சபைகளைத் தாபித்தல் (5 சனவரி 2026) விளையாட்டுத்துறைத் திணைக்களத்திற்குச் சொந்தமான விளையாட்டுக் கட்டடத் தொகுதிகளின் 2025 – 2027 காலப்பகுதிக்கான பயன்பாடு, பராமரிப்பு, மற்றும் நிர்வாகத்தை மேம்படுத்துவதற்காக 5 உறுப்பினர்களைக் கொண்ட முகாமைத்துவச் சபைகளைத் தாபிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது. 'ஒரு விளையாட்டுக் கலாசாரத்தை உருவாக்குதல்' கருத்திட்டத்தின் பகுதியாகும்; பாடசாலைகள் மற்றும் பொது விளையாட்டு மைதானங்கள் என்பவற்றையும் உள்ளடக்குகின்றது.

•

## IV. அதிவிசேட வர்த்தமானிகள் தெரிவு செய்யப்பட்டவை)

### தேசியப் பாதுகாப்பு மற்றும் பொது ஒழுங்கு

வர்த்தமானி 2473/14 (28 சனவரி 2026) – பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்

- பொது ஒழுங்கை உறுதி செய்வதற்கும், அத்தியாவசிய சேவைகளைப் பேணுவதற்கும் அரசாங்கத்தை இயலச் செய்து, நாடு முழுவதும் பொது அவசரகால நிலையொன்றை சனாதிபதி பிரகடனம் செய்தார்.

வர்த்தமானி 2473/13 (28 சனவரி 2026) –அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டம்

மின்சாரம், எரிபொருள், வைத்தியசாலைகள், போக்குவரத்து, நீர், உணவு, உள்ளூராட்சி மன்றங்கள், நீர்ப்பாசனம், தொலைத்தொடர்பு, மற்றும் விவசாயம் என்பவற்றை உள்ளடக்கி, டித்வா சூறாவளிக்குப் பிந்திய மீட்டெடுப்பு நடவடிக்கைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனம் செய்கின்றது.

வர்த்தமானி 2473/16 (28 சனவரி 2026) – 2026 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்குவிதிகள்

- அதிகாரிகளின் நியமனம், வளவுகள், வாகனங்கள், மற்றும் சேவைகளைத் தேவைக்கெடுத்தல், அத்தியாவசிய சேவைகளின் பிரகடனம், தடைகள் அல்லது தவறான தகவல்களைத் தடுத்தல், தத்துவங்களைப் பகிர்ந்தளித்தல், அலுவலர்களைப் பாதுகாத்தல், தண்டங்கள் உள்ளடங்கலான அவசரகாலத் தத்துவங்களைத் தாபிப்பதுடன் 2025 ஆம் ஆண்டின் அவசரகால ஒழுங்குவிதிகளையும் இல்லாதொழிக்கின்றது

வர்த்தமானி 2473/8 (26 சனவரி 2026) – சனாதிபதியின் கட்டளை

- குறித்துரைக்கப்பட்ட மாவட்டங்களிலும் அடுத்துள்ள நீர்ப்பரப்புகளிலும் பொதுமக்களின் அமைதியைப் பேணுவதற்காக, 2026 சனவரி 27 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, ஆயதந்தாங்கிய படைகளின் அனைத்து உறுப்பினர்களையும் அழைக்கின்றது.

வர்த்தமானி 2470/56 (9 சனவரி 2026) – பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்

- கட்டளைச் சட்டத்தின் II ஆம் பகுதியை 2025, டிசம்பர் 28 ஆம் திகதியிலிருந்து இலங்கை முழுவதும் தொழிற்பாட்டிற்குக் கொண்டுவரும் சனாதிபதியின் பிரகடனம் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது என்பதை அறிவிக்கின்றது.

### பதிவு மற்றும் அடையாளம்

வர்த்தமானி 2472/47 (22 சனவரி 2026) – ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டம்

- உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப நடைமுறைகள் ஆயத்தம் செய்யடும் வரை, ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் சில ஏற்பாடுகள்/ கட்டளைகளுக்கான தொழிற்பாட்டு முடிவுறுகைத் திகதியை 2026, டிசம்பர் 31 வரை நீட்டிப்புச் செய்கின்றது

வர்த்தமானி 2472/22 (21 சனவரி 2026) – ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டம்

- அவசியமான நடைமுறைகள் தயாரிக்கப்படும் வரை, ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் சில ஏற்பாடுகளின்/ கட்டளைகளின் முடிவுறுகைத் திகதியை 2026, டிசம்பர் 31 வரை நீட்டிப்புச் செய்வதற்கு வலியுறுத்துகின்றது.

### தேர்தல்கள்

வர்த்தமானி 2472/21 (21 சனவரி 2026) – பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்

- கட்சியின் யாப்பு, கட்சியின் உத்தியோகத்தர் சபையின் பட்டியல், கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள், கொள்கைப் பிரகடனங்கள் மற்றும் தொடர்ந்து செயற்பட்டு வருவதற்கான சான்று என்பவற்றை சமர்ப்பித்தல் உள்ளடங்கலாக, பாராளுமன்றத் தேர்தலுக்காக அரசியல் கட்சிகளை

அங்கீகரிப்பதற்கான பணிப்புரைகளை முன்வைக்கின்றது. கட்சிகளினுள் உள்ளக ஆளுகை, பால்நிலைப் பிரதிநிதித்துவம், நிதிசார் வெளிப்படைத்தன்மை, மற்றும் சனநாயகரீதியான தீர்மானம் மேற்கொள்ளல் என்பவற்றிற்கான வழிகாட்டல்களை வழங்குகின்றது.

வர்த்தமானி 2471/24 (13 சனவரி 2026) – பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்

- பாராளுமன்றத் தேர்தல் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் சின்னங்களுக்கு அங்கீகாரம் வழங்குகின்றது.

வர்த்தமானி 2470/48 (8 சனவரி 2026) – பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்

- பாராளுமன்றத் தேர்தல் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பட்டியலை வெளியிடுகின்றது.

## தொழில் மற்றும் தொழில்வாய்ப்பு

வர்த்தமானி 2473/25 (30 சனவரி 2026) – கடை, அலுவலக ஊழியர் சட்டம்

- இரவுநேரக் கடமைகள், நலன்புரிப் பொறுப்புகள், தங்குமிடம், மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகள் என்பவற்றைக் குறித்துரைத்து, கடை, அலுவலகப் பெண் ஊழியர்கள் மீதான 1954 இன் ஒழுங்குவிதிகளைத் திருத்துகின்றது.

வர்த்தமானி 2472/69 (24 சனவரி 2026) – சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம்

- 2025 ஒக்டோபபருக்கான வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டிகளை (212.2) அடிப்படையாகக்கொண்டு, கொக்கோ, ஏலக்காய், மற்றும் மிளகு வளர்ப்பு மற்றும் உற்பத்தி வர்த்தகத்துறையில் ஈடுபடும் நாளாந்தக் கூலி பெறும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் 2025 நவம்பருக்கான விசேட கொடுப்பனவைக் குறித்துரைக்கின்றது. தொகை: சாதாரண வேலை நாள் ஒன்றிற்குத் தொழிலாளர் ஒருவருக்கு ரூ. 1,852.39.

## போக்குவரத்து மற்றும் மோட்டார் போக்குவரத்து

வர்த்தமானி 2471/68 (17 சனவரி 2026) – தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டம்

- இடமாற்றம் செய்வோர் மற்றும் இடமாற்றப்படுவோருக்கான நிதி மற்றும் தொழிற்பாட்டுத் தேவைப்பாடுகள் உள்ளடங்கலாக, அங்கீகாரம், தொழிற்பாடு, மற்றும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பித்தல் என்பவற்றிற்கான நடைமுறைகளைத் தாபிக்கின்றது.

வர்த்தமானி 2470/14 (5 சனவரி 2026) – மோட்டார் வாகனச் சட்டம்

- நான்காம் அட்டவணையிலுள்ள கட்டணங்களைத் திருத்துகின்றது: மோட்டார் சைக்கிள்கள்/ முச்சக்கர வண்டிகள் தவிர்ந்த அனைத்து வாகனங்களுக்கும் விசேட வாகன இலக்கங்களை (100,000 வரை) ஒதுக்குதல்; கட்டணங்கள் ரூ. 1,000,000 ஆக குறிக்கப்பட்டுள்ளன.

## விலங்கு சுகாதாரம்

வர்த்தமானி 2471/33 (13 சனவரி 2026) – விலங்கு நோய்கள் சட்டம்

- ஆபிரிக்கப் பன்றிக் காய்ச்சல் (ASF) பரவக்கூடியவையாக அனைத்து மாவட்டங்களையும் பிரகடனம் செய்து, பன்றிகளை நோய் தொற்றத்தக்க விலங்கினமாகக் குறித்துரைப்பதுடன், அனுமதிப்பத்திரமின்றி பன்றிகளை/ பன்றி இறைச்சியை அகற்றுதல், விற்றல், இறைச்சிக்காகக் கொல்லுதல், மற்றும் பதப்படுத்தல் என்பவற்றைத் தடை செய்கின்றது என்பதுடன் இந்த நடவடிக்கைகளை மூன்று மாதங்களுக்கு அமுலாக்கம் செய்வதற்கும் அலுவலர்களுக்கு அதிகாரமளிக்கின்றது.

## விளையாட்டு மற்றும் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கான எதிர்ப்பு

வர்த்தமானி 2471/51 (16 சனவரி 2026) –விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டம்.

- 
- 2026 உலக தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து தொடர்பான சட்டக்கோவைக்கு நேரொத்ததாக, சனவரி 1 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில், 2026 இற்கான விளையாட்டில் ஊக்குப் பதார்த்தங்களாகத் தடை செய்யப்பட்ட பொருட்களின் பட்டியலை வெளியிடுகின்றது.

## மத அனுஷ்டானங்கள்

வர்த்தமானி 2472/51 (23 சனவரி 2026) – யாத்திரைக் கட்டளைச்சட்டம்

- தென் மாகாணத்தின் தவலம பிரதேச செயலகப் பிரிவின் ஹினிதும தெற்கு மற்றும் மல்ஹத்தாவ இரு கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் உரித்தான ஹினிதும கல்வாரி திருத்தலத்தின் (‘புனித அன்னம்மாள் ஆலயம்) வருடாந்தமாக நடத்தப்படும் தவக்கால யாத்திரைக் காலம் 2026, பெப்ரவரி 18 முதல் 2026, ஏப்பிரல் 5 வரை நடத்தப்படும் என்பதை அறியத் தருகின்றது.

## நியமனங்கள்

வர்த்தமானி 2472/45 (22 சனவரி 2026) – சனாதிபதியின் நியமனம்

- சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளராக டாக்டர் அனில் ஜயசிங்கவை 2026, சனவரி 15 தொடக்கம் ஒரு வருட காலப்பகுதிக்கு நியமிக்கின்றது.

வர்த்தமானி 2470/23 (7 சனவரி 2026) – மாகாண சபைகள் சட்டம்

- 2025 டிசம்பர் 19 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தென் மாகாணத்தின் பிரதம செயலாளராக திரு. சந்திம சீ. முகாந்திரம்கே அவர்களை நியமிக்கின்றது.

## சர்வதேச ஒத்துழைப்பு

வர்த்தமானி 2470/4 (5 சனவரி 2026) – குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டம்

- பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலைக் கண்டறிதல்/ இழுப்பித்தல் ஆகியவை உள்ளடங்கலாக, மாலைதீவுடன் குற்றவியல் கருமங்களில் ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவியளித்தலுக்கான சட்டத்தின் ஏற்பாடுகளைப் பிரயோகித்தல்.

## பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் தடைகள்

வர்த்தமானி 2470/19 (6 சனவரி 2026) – ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்குவிதிகள்

தடைகள், கண்காணிப்பு, மற்றும் நிதியளித்தல் கட்டுப்பாடுகளுக்காகப் பெயர் குறிக்கப்பட்ட பயங்கரவாத உருவகங்கள் மற்றும் ஆட்களின் பட்டியல்: LTTE, TGTE, NTJ, TCC, WTM, மற்றும் தொடர்புடைய தனியாட்கள்.

வர்த்தமானி 2470/20 (6 சனவரி 2026) – ஐக்கிய நாடுகள் சபைச் சட்டம்

- 4 ஆம் ஒழுங்குவிதியின் கீழ், (ஐக்கிய நாடுகள் சபையின் தடைகள்) பெயர் குறிக்கப்பட்ட ஆட்கள், குழுக்கள், மற்றும் உருவகங்களின் எல்லா நிதியங்கள், நிதிசார் சொத்துக்கள், மற்றும் பொருளாதார வளங்களையும் முடக்குகின்றது. முன்னைய கட்டளைகளை எவற்றிற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கின்றது.

## ஊழல் எதிர்ப்பு

வர்த்தமானி 2470/18 (5 சனவரி 2026) – ஊழல் எதிர்ப்புச் சட்டம்

- 26(4), (5), (8), மற்றும் (9) ஆம் பிரிவுகளின் கீழ் ஆணைக்குழுவுக்குத் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள்/ஊழியர்களுக்கான விதிகள்; 2026 சனவரி 1 ஆம்

திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்; சட்டத்துடன் ஒவ்வாதிருக்காதவிடத்து, தாபன விதிக்கோவை, நிதி ஒழுங்குவிதிகள், மற்றும் உரிய அரசாங்க விதிகளின் பிரயோகத்தை உறுதிப்படுத்துகின்றது.

## சங்கங்களின் பதிவு

வர்த்தமானி 2470/30 (7 சனவரி 2026) – சங்கங்கள் கட்டளைச்சட்டம்

பின்வருவன உள்ளடங்கலான பல்வேறு சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன:

- சூர்யோத சங்விதான எகமுத்துவ: சமூகத்தை வலுப்படுத்தல், சமூகத் தொழில்முயற்சியாண்மைக்கு ஆதரவு வழங்குதல், தன்னார்வ அமைப்புகளை ஒன்றிணைத்தல், சனநாயகத்தைப் பாதுகாத்தல், பொதுமக்களை ஒன்றுகூட்டுதல்.
- பொறியியல் சேவைகள் உத்தியோகத்தர்களின் வரையறுக்கப்பட்ட சங்கம்: NVQ-5/6 பொறியியலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், தொழில்வாண்மைத் தராதரங்களை மேம்படுத்தல், தொழில்வாய்ப்பிற்கு உதவுதல், சட்ட ஆதரவை வழங்குதல், பாடவிதான அபிவிருத்தியை முன்மொழிதல்.
- மெத்சு இயற்கை விவசாயிகள் சங்கம்: தெங்கு விவசாயிகளின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தல், நியாயமான விலைகளை உறுதிப்படுத்தல், தேங்காய்ப் பற்றாக்குறையினைக் குறைத்தல்.